DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 41/2019**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. வினோத் சாந்தாராம் | Caste: | |
| Father's Name: | ராஜநிதி | Calling: | துணை ஆணையர்,<br>திருநெல்வேலி கிழக்கு |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 45 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 30.01.2026

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

**முதன்மை விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர துணை ஆணையராக (திருநெல்வேலி கிழக்கு) பணியாற்றி வருகிறேன். கடந்த 2014ம் வருடம் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளராக பணியாற்றியபோது நயினார்கோவில் காவல்நிலைய கு.எண். 17/2014 சட்டப்பிரிவுகள் 323, 324 IPC and sec 3(1)(x) of SC/ST (POA) Act ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கினை புலன் விசாரணை மேற்கொள்ள இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது செயல்முறை ஆணை எண். C.No. 05-10/STAT/DCRB/RM/2014, Dated: 14.02.2014 தேதியிட்ட உத்தரவின்மூலம் என்னை புலன் விசாரணை அதிகாரியாக நியமித்தார். அந்த உத்தரவு **அ.சா.ஆ.9**. நான் அந்த வழக்கை 17.02.2014ம் தேதி எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 8.00 மணியளவில் சம்பவ இடமான பாண்டியூர் பஸ்ஸ்டாப் சென்று

சாட்சிகள் பசுபதி மற்றும் வெள்ளைத்துரை ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையெழுத்து பெற்றேன். நான் தயார் செய்த வரைபடம் **அ.சா.ஆ.10.** சம்பவத்தில் தொடர்புடைய வாகனம் மற்றும் ஆயுதமான அருவாளை பாண்டியூர் பஸ்ஸ்டாப்பில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். நான் தயார் செய்த அத்தாட்சியில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அன்றைய தினமே புகார் கொடுத்த சாட்சி செல்வராஜ் மற்றும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சி பழனி மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்பட்ட சாட்சிகள் ராமன் மகன் பழனி, குமரவேல் மற்றும் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி மலைவேலு மற்றும் பார்வை மகசர் மற்றும் அத்தாட்சி தயார் செய்தபோது அதற்கு சாட்சிகளாக இருந்த பசுபதி, வெள்ளைத்துரை ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். அன்றைய தினமே 2ம் எதிரி நீலமேகத்தை பாண்டியூர் புயல் காப்பகம் அருகே வைத்து மதியம் சுமார் 12.30 மணிக்கு கைது செய்து பின்பு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 18.02.2014ம் தேதி பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் எதிரிகளுக்கு சாதிச்சான்றிதழ் வழங்கும்படி பரமக்குடி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியருக்கும், இராமநாதபுரம் வட்டாட்சியருக்கும் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 19.05.2014ம் தேதி பரமக்குடி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் செண்பகலதா அவர்களை விசாரித்து சாதிச்சான்றிதழ் பெற்று அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். சாட்சி செண்பகலதா எதிரிகள் இருவரும் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த இந்து மறவர் சமூகத்தை சார்ந்தவர்கள் என சான்று

வழங்கினார். 19.05.2014 ம் தேதி பரமக்குடி வட்டாட்சியர் விஜயா அவர்களை விசாரித்து புகார் கொடுத்த செல்வராஜ் என்பவருக்கு சாதிச்சான்றிதழ் பெற்று அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். செல்வராஜ் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து பள்ளர் என்று சான்று வழங்கினார். அவருக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ் **அ.சா.ஆ.11.** சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சி பழனி என்ற பழனிமுருகனுக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய இராமநாதபுரம் வட்டாட்சியர் நீலகண்டபிள்ளை என்பவரை 19.05.2014 ம் தேதி விசாரித்து சாதிச்சான்றிதழ் பெற்று அவரின் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். வட்டாட்சியர் நீலகண்டபிள்ளை சாட்சி பழனி பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து பள்ளர் என்று சான்று வழங்கினார். அந்த சாதிச்சான்று **அ.சா.ஆ.12**. பின்பு காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை வழங்கிய இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் போஸ் அவர்களை 19.05.2014 அன்று விசாரித்து காயச்சான்றிதழ்கள் பெற்று அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நயினார்கோவில் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகானந்தம் அவர்களை 19.05.2014 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எனது விசாரணையை அன்றே முடித்து 1ம் எதிரி மீது 324 IPC r/w. 3(1)(x) of SC/ST (POA) Act ன் கீழும் 2ம் எதிரி மீது 323 IPC r/w. 3(1)(x) of SC/ST (POA) Act ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட்டேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

புகார் கொடுத்த செல்வராஜ் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் சம்பவம் எந்த தேதி, மாதம், வருடத்தில் நடந்தது என குறிப்பிட்டு

சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் கார்த்திக் என்பவரது மதுபானக்கடையில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாகத்தான் இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றதாக புகார் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் கார்த்திக் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பாண்டியூரில் பாண்டியூர் பேருந்துநிறுத்தம், பெட்ரோல் பல்க் மற்றும் மதுபான பார் மூன்றும் வெவ்வேறு இடங்களில் உள்ளன என்றால் சரிதான். புகார்தாரர் புகார் வாக்குமூலத்தில் 2 நபர்களின் பெயர்களை குறிப்பிட்டும் மற்றும் சிலர் என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மருத்துவரிடம் சிகிச்சைக்கு சேரும்போது தன்னை 2 பெயர் தெரிந்த நபர்களும் 4 பெயர் தெரியாத நபர்களும் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த 4 நபர்கள் குறித்து நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல, எனது விசாரணையில் எதிரிகள் மட்டும் சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரிய வந்தது. அடையாளம் தெரியாத 4 நபர்களால்தான் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும் எதிரிகளுக்கும் காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் 17.02.2014 காலை 8.00 மணிக்கு பார்வையிட்டு தயார் செய்யப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். பார்வை மகசரில் நான் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றக்கூடிய தடயங்கள் எதுவும் இல்லை என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தயார் செய்துள்ள அத்தாட்சி 17.02.2014 ம் தேதி காலை 9.00 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து இருசக்கர வாகனம் மற்றும் அருவாளை கைப்பற்றியதாக தயாரித்துள்ளேன் என்றால் சரிதான். அத்தாட்சி மற்றும் பார்வை மகசர் வெவ்வேறு நபர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால்

சரிதான். ஆனால் 2 ஆவணங்களும் என்னால் கையெழுத்து செய்யப்பட்டுள்ளது. நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவிலலை என்றும், பார்வை மகசர், அத்தாட்சி சொன்ன நேரத்தில் தயார் செய்யப்படவில்லை என்றும் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. அதேபோல் எதிரியை சொன்ன தேதி, நேரத்தில், இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் பெறப்படவில்லை என்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் நான் முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றும் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த நபர் மதுபோதையில் எங்கோ விழுந்து ஏற்படுத்திக்கொண்ட காயத்தை வைத்து பொய்யான புகாரை கொடுத்துள்ளார் என்றும், அதை முறையாக விசாரணை செய்யாமல் பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.30 15:26:31 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)